தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 24-9-2014
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மைப் பல்கலையில் "ஃபுட் எக்ஸ்ப்ளோர் 14" நடைபெற உள்ளது

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இளங்கலை உணவு பதன்செய் பொறியியல் மாணவர்கள் நடத்தும் தேசிய அளவிலான கருத்தரங்கு **"ஃபுட் எக்ஸ்ப்ளோர் 14"** (FOODXPLORE'14) செப்டம்பர் 26, 2014 அன்று காலை 9 மணிக்கு தொடங்கி நடைபெற உள்ளது. இக்கருத்தரங்கம் அக்டோபர் 16 அன்று கொண்டாடப்படும் **உலக உணவு தினத்தை** முன்னிட்டு நடத்தப்படுகிறது.

உணவு மற்றும் வேளாண் துறைகளை சார்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் இக்கருத்தரங்கில் பங்குபெற உள்ளனர். சிறப்பு விருந்தினராக ஜே.எம். அடுமனை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் **திரு. ஜோசப் லாரன்ஸ்** அவர்கள் கலந்துகொள்கிறார்.

சிறப்பு பேச்சாளராக பி.ஐ.எஸ் இன் பிரதிநிதி **திரு. டி.பி. குமார்** மற்றும் ஆர்.எஸ். வருகடலைமில், சண்முகம்பிள்ளை அண்டு சன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் **திரு. ஆர். எஸ்.பி. மகாராஜன்** ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

தாள் முன்னிலைப்படைப்பு, விளம்பர முன்னிலைப்படைப்பு, வினாடிவினா போன்ற நிகழ்ச்சிகள் கருத்தரங்கில் இடம்பெறும். விளம்பர முன்னிலைப்படைப்பு, வினாடிவினா போட்டிக்கு நேரடி பதிவு வரவேற்கப்படுகிறது.

மக்கள் தொடர்பு அலுவலர்